**ஆகஸ்ட் - 7**

**"ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்."**

**- 2தீமோ 2 : 5**

யேசு காலங்களையும் வேளைகளையும் முறைகளையும் அனுசரித்தார். தன்னுடைய எதிரிகளின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களிலிருந்து தான் கண்டுகொண்ட நேரம் வரை அவர் ஒருபோதும் துணிவுடன் தனது ஜீவனை ஆபத்திற்குள்ளாக்கவில்லை. ஜனங்கள் கேட்பதற்காக தெருவின் மூலையில் நின்றுகொண்டு நீண்ட ஜெபங்களை அவர் செய்யவில்லை. திரளான கூட்டத்தாருக்கு உரத்த ஆடம்பரமான பிரசங்கத்தினால், புத்தி சொல்லவுமில்லை. தீர்க்கதரிசி சொல்லுகிற பிரகாரமாக அவர் தமது சத்தத்தை உயர்த்தவுமில்லை. வீதியில் கூக்குரலிடவுமில்லை. (ஏசா 42 : 2) வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்ஜியத்தின் சுதந்தரராக இருக்க, தான் விரும்புகிற வகுப்பை ஜனங்களிலிருந்து தெரிந்தெடுப்பதில் நற்பயனளிக்கிறதும், நியாயமானதும், ஞானமானதுமான தேவனுடைய முறைகளை அவர் தெரிந்தெடுத்தார். பந்தயத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுகிற நாம் போதகரின், அடிச்சுவடுகளை கவனிக்கிறவர்களாகவும் அவருடைய ஆவியினால் அதிகதிகமாக நிரப்பப்பட்டவர்களாயும் இருப்போமாக. **- Z ’02, 265(R 3069)**

மெச்சத்தக்க செய்கைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு பந்தயப்பொருள் கொடுக்கப்படும் பொழுதெல்லாம், போட்டியிடுகிறவரின் நடத்தையை ஒழுங்குபடுத்த விதிகளும், நிபந்தனைகளும் போடப்படுகின்றன. இவைகளுக்கு இணங்கிப்போனால் மாத்திரம் ஜெயித்தவனுக்கு வெகுமதி கொடுக்கப்படுகிறது. கிரேக்கருடைய விளையாட்டுகளில் இப்படித்தான் இருந்தது. நித்திய ஜீவனுக்காக நாம் ஓடுகிற ஓட்டத்தில் இது உண்மையாயிருக்கிறது. தேவனுடைய ஏற்பாட்டிற்காக ஜீவனை கொடுக்கும்போது கிறிஸ்துவைப் போலொத்த ஒரு குணத்தை தங்களில் அபிவிருத்தி செய்கிறவர்கள் மாத்திரம் ராஜ்ஜியத்தில் நித்திய ஜீவனின் பந்தயப்பொருளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கர்த்தர் உத்தரவிட்டிருக்கிறார். தங்களை பிரத்தியோகமான அன்பர்கள் என்று பாவனை செய்கிற சிலருக்காக இந்த நிபந்தனைகள் மாற்றப்படவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது. எல்லோரும் இங்கே சமமாக நடத்தப்படுகிறார்கள். பாத்திரராயிருக்கிறவர்கள் மாத்திரமே ராஜ்ஜியத்தில் நித்திய ஜீவனால் முடி சூட்டப்படுகிறார்கள். **- P ’30, 109.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**1கொரி 9:24-26; எபே 6:11-17; 1தீமோ 6:12; பிலி 3:14; எபி 12:1,2; 2தீமோ 2:3;4:7,8.**

**கோபுர வாசிப்பு : Z ’02, 264 (R 3069)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் எவ்வாறு போராடினேன்? சட்டப்படியா? சட்டத்திற்கு விரோதமாகவா? அதில் எனக்குத் தைரியமூட்டியது எது? இடையூறாக இருந்தது எது? இடையூறுகளை நான் எவ்வாறு மேற்கொண்டேன்? மற்றவர்கள் மீதும், என் மீதுமான விளைவு என்ன?**